தனிப்பிரதி 0-1-0 வார வெளியீடு Regd. No. M. 4004

# சமரசம்

கோர்வை 6 | திருச்சினுப்பள்ளி, 6-10-1944. ஹிஜிரி 1363 ஷவ்வால 17. தாரண-ஹு புரட்டாசி-மீ 21உ | மணி 38

# 'இந்து நேசன்' 10 மோசடி வித்தைகள்!

## வயிறு கழுவ வேறுவழி கிடையாதா ?

[N B.P.]

சென்னையினின்று வெளிவரும் "இந்து நேசன்" என்னும் தமிழைக்கொலைபுரியும் வாரப்பத்திரிகை, தமக்குத் தெரிந்த பல மோசடி வித்தைகளைப் பொது மக்களுக்குக் காண்பித்துக் கொண்டு வருகின்றது.

இப்பத்திரிகையைப் பார்ப்பவர்கள் ஓர் மோசடியாக இருக்கிறதே என்று எண்ணி ஆச்சரியப்படுகின்றனர். ஆமாம் இப்பத்திரிகையின் போக்குப் பார்வைக்கு மாயவித்தையாகக் காணப்பட்டாலும், உண்மையில் பெரிய பணம் பறிக்கும் மோசடியான ஜாலவித்தையுங்கூட. இந்த "இந்து நேசனின்" மோசடி வித்தையை அறியப்பொதுஜனங்களுக்கு சிறிது யோசிக்கும் சக்தியும் வேண்டும் என்று கூற ஆசைப்படுகின்றேன். போலீஸ் இலாகாவுக்கே பல ஜால வித்தைகளைக் காட்டிய இவன் பாமர மக்களுக்கு தமது ஜால வித்தைகளைக் காட்டுவதா சிரமம் என்று யோசித்துப் பாருங்கள். பத்திரிகைகளின் உயர்ந்த அந்தஸ்த்தை பாழ்ப்படுத்த இப்பத்திரிகையை நடத்தி வருகிறான். பாவம் வயிறு கழுவுவதற்கு வேறு வழி கிடையாது போலும்.

நின்ற "சினிமா தூது" சந்தா பணம் நேரில் வாங்க முடியாது அச்சுக்கூடத்தில் [illegible]த்திரிகை விலைக்கு கிடைக்காது, அச்சுக்கூடத்தில், வீட்டில் போலீஸ் படை இருந்துகொண்டிருக்கின்றது என்று காணப்பட்டது. பொது மக்கள் இதுவரையில் எவ்வளவோ உயர்ந்த பத்திரிகைகளை எல்லாம் பார்த்திருப்பார்கள். அவற்றுள் எந்தப் பத்திரிகையாவது சந்தாப்பணத்தை நேரில் வாங்குவதில்லை என்றோ, பத்திரிகை காரியாலயத்தில் பத்திரிகை விற்பதில்லை என்றோ எழுதியிருக்குமா ? போலீஸ் பார்வையிருக்கிறது என்று நமக்கு பயங்காட்டி காரணத்தைச் சொல்லுகிறான் இது முதல் மோசடி வித்தையா.?

### பொங்கல் மலர் பொங்கலானது

பொங்கல் மலர் வருகின்றது என்று விளம்பரம் செய்யப்பட்டு பிறகு, தயாரான அச்சுக்களை எதிரிகள் உடைத்துவிட்டதினால் 2ம் வாரம் தாமதித்து வெளிவரும், அதாவது (11-2-44) க்கு வரவேண்டியது இன்றைதேதிவரையில் வெளிவரவில்லை. காரணம் என்ன ? பொங்கல் மலரைப்பற்றி ஒரு விஷயமும் வாராமல் கப் சிப் என்று அடங்கிவிட்டது. பொங்கல் மலரை நிறப்ப விபசாரச் செய்திகள் கிடைக்கவில்லை போலும். நிறக் கலைக்கவந்தவர்கள் போலீசார் வருவதற்குள் ஓடிவிட்டனர் என்று (28—1—44) "சினிமா தூது" பத்திரிகையில் செய்திக் காணப்படுகின்றது. இவன் வீட்டிலும், காரியாலயத்திலும் சதாபோலீஸ்படை இருக்கிறது என்று விளம்பரப்படுத்திக் கொண்டது பொய்தானே ! இது 2ம் மோசடி வித்தையா ?

"தனிப்பிரதிக்கு ஸ்டாம்பு அனுப்பினுல் அனுப்பமுடியாது" பத்திரிகைக்கு இந்தச் சட்டம் [illegible] பொதுமக்கள் ஒரு பிர[illegible] பார்த்துவிட்டு மோசடியைத்தெரிந்து கொண்டால் பிழைப்பது எப்படி என்று இந்த யுக்தி போலும். 100, 50 பிரதிகளை மொத்தமாக வாங்கிக்கொண்டால் லாபம் அடையலாம் என்பது இவன் கருத்துப் போலும். இது 3-வது மோசடி வித்தையா?

"சினிமாதூது" என்ற பத்திரிகையைநிறுத்த எவருக்கும் அதிகாரம் கிடையாது என்று வீரமான ஓர் தலையங்கம் (28-1-44) பத்திரிகையில் வந்தது. எப்படி "சினிமாதூது" நின்றது? என்று கேட்கிறோம். இதற்கு சமாதானம் சொல்ல குயுக்தி ஒன்றும் அகப்படவில்லையா ? அல்லது 4-வது மோசடி வித்தையா ?

"இந்து நேசன்" தினசரியாக்கப்போவதாக விளம்பரம் செய்யப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் ஆகின்றது. எங்கே "தினசரி" என்றுகேட்கின்றோம்? ராய்ட்டர், அஸோஸியேட் பிரசுக்கு என்ன செய்வது என்ற முழிப்பா ? அல்லது இது 5-ம் மோசடி வித்தையா ?

### அந்தமான் கைதியல்லவா ?

(19-8-44) "இந்து நேசன்" முன் பக்கத்தில் சதுரக் கட்டம் இட்டு அதில் அபாய அறிவிப்பு என்ற தலைப்பில், என்னிடத்தில் வருபவர்கள் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்று எழுதி இருக்கின்றது. அபாய அறிவிப்பு என்ற வார்த்தையை இதுவரையில் பத்திரிகை எழுத்தாளர் விஷயத்தில் வந்ததேயில்லை. மின்சாரம் இருக்கும் இடத்தில்தான் அபாய அறிவிப்பு என்ற வார்த்தைகளைப் பார்த்து இருக்கிறோம். 'இந்து நேசன்" பத்திரிகைக்காரன் என்ன மின்சாரமே உருவாகக் கொண்டவனு ? அல்லது கொலை பாதகனு? என்று அறிய ஆசைப்படுகிறோம். ஆமாம் ! விராதிவீர அந்தமான் கைதியல்லவா ? என்னிடத்தில் வருபவர்கள கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்று சொல்லப்பட்டதேதவிர எந்தவி[illegible] கஷ்டம் என்பதை [illegible] சொல்லவில்லை. இ[illegible] 6ம் மோசடி வித்தைதா[illegible]

### காசுபறிக்கும் தந்திரம்

சதுர்த்தி மலர் வரும் என்று விளம்பரம் "இந்து நேசனில்" காணப்பட்டது. இந்த விளம்பரம் ஒரு மாதத்திற்கு மேலாகவே பத்திரிகையில் காணப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. இதுவரையில் மலர் வந்தபாடு இல்லை. ............ யாரும் அகப்படவில்லையா ? காலிகள் அச்சுக்களைக் கலைத்துவிட்டனர் என்ற அறிக்கையை எதிர்பார்க்கலாமா? அதுவும் சதுர்த்தி மலரில் புதிய செய்தியை எதிர்பார்க்கவேண்டாமாம். பழைய "சினிமா தூது" பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் பூராவும் வருமாம். விஷயமில்லாவிட்டால் தமது சொந்தமான தும், வாழ்க்கையிலேயே நடைபெற்ற அபூர்வ சம்பவங்களையே சதுர்த்தி மலரில் நிறப்பலாமே. படித்த விஷயத்தையா மறுபடியும் போட்டு காசு பறிப்பது ? இது 7ம் மோசடி வித்தையா ?

---

### ஏஜண்டுகளுக்கு அறிவிப்பு

நமது சமரசம் பத்திரிகைக்கு ஏஜண்டாக இருக்க விரும்புபவர்கள், முன்பணமாக ரூ 15 டிபாஸிட்கட்ட வேண்டும். அதற்குக் குறைந்த டிபாஸிட்டும், வாபஸ் பிரதிகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ரூ 15 டிபாஸிட் கட்டியவர்களுக்கு வாரம் 30 பிரதிகள் வரை அனுப்பப்படும். அதற்குமேல் அதிகப்பிரதிகள் வேண்டுபவர், பிரதி 1-க்கு 0-8-0 விதம் அதிக டிபாஸிட் அனுப்பினுல்தான் அனுப்ப முடியும். அதிகப்படியாக பிரதிகள் தேவைப்படுபவர்கள் ஒவ்வொரு வியாழக்கிழமைக்குள் அறிவித்துவிட வேண்டும். 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும். வெளியூர்களில் பிரதி ஒன்று நிர்ணயித்துள்ள விலையைக்காட்டிலும் அதிக விலைக்கு வி[illegible]தாகத்தெரிகிறது. அப்ப[illegible]பவர்கள் ஏஜன்ஸியை [illegible] செய்து விடுவோம். அனுவசியமான கடிதங்களுக்கு பதில் [illegible] முடியாது, விபரம் விரும்புபவர்[illegible] கார்டோ, ஸ்டாம்பு கவர்களோ அனுப்பினுல்தான் பதில் தெரிவிக்க முடியும்.

மானேஜர், "சமரசம்"
திருச்சி.

---

[26-9-44] "இந்து நேசனில்" உஷார் என்ற தலைப்பில் ஆசிரியரின் கால் தூசியையும் கூடப் பார்க்கமுடியாது என்று காணப்படுகின்றது. இவன் என்ன கருபியா ? சைத்தானு ? பேயா ? அல்லது கால் தூசியையுங்கூடப் பார்க்கமுடியாத அவ்வளவு மறை

(4-ம் பக்கம் பார்க்க.)

சந்தா விபரம்.

வருட சந்தா ரு 4—0—0
6 மாதத்திற்கு ரு 2—0—0
ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது

விளம்பரம்
கோர்ட் நோட்டீஸ், சர்க்கார் விளம்பரம் முதலியவைகளுக்கு
இஞ்சு 1-க்கு ரு 3—8—0
வியாபார சம்பந்தமானது
ரு 2—8—0

'சமரசம்.'

1944ஆ அக்டோபர்மீ 6உ
வெள்ளிக்கிழமை.

# பெரியார் விளக்குவாரா ?

திரு காந்தியாரும், திரு ஆச்சாரியாரும் இந்து — முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தி விட வேண்டுமென்று பெரும்பாடுபடுகிறவர்கள்மாதிரி, அறிக்கைகள் விடுத்தனர்.

காயிதே ஆஜம் ஜின்னா அவர்கள், இது வழக்கம்போல் செய்யும் விளம்பரக் கூச்சல் என வாளாவிருந்தார். ஆனால்விடாப்பிடியாகக் காஷ்மீரிலிருந்த காயிதே ஆஜம் அவர்களுக்குக் கடிதங்கள்பல எழுதி, அவரைக் கண்டு பேச விரும்பினர். வீடு திரும்பினதும் விவரிக்கிறேன் என்றார் ஜின்னா பின்னர் பம்பாயில் காந்தியாரைச் சந்திக்க ஜின்னா. ஏற்பாடு செய்ததை யாவரு மறிவர். நடத்திய காலம் பஞ்சாபிலே முஸ்லிம்களிடையே சில சிக்கல்கள் இருக்கிற தருணத்தில்! திரு காந்தியாரும், ஆச்சாரியாரும் இந்த சமயத்தில் இக்கொற்றபிரச்சாரத்தைநடத்தினால்தான், முஸ்லிம்கள் பணிந்து விடுவார்கள் என்று கருத்தில கொண்டு காரியம் நடத்தினர்.

சமரசப் பேச்சு வார்த்தை துவங்கு முன்பு, ஜனாப் ஜின்னா அவர்கள் தமக்கு வேண்டிய பொறுப்பையும், ஆதரவையும் அகில இந்திய முஸ்லிம்களிடம் அனுமதி பெற்றிருந்தார். காரணம், எப்படியாவது ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதே, இது முஸ்லிம்களின் பெருந்தன்மை. மகாத்மா காந்தி அவர்களோ யாருக்கும் பிரதிநிதியில்லாது, தன்னந்தனியராய், தனது செல்வாக்கை உபயோகப்படுத்தி மக்களைத்திருத்திவிடுவேனென்ற கருத்துடன் இருந்தார் என்பது பேச்சின் தெளிவு. ஆனால் அவர் யாருக்குப் பிரதிநிதி? அவருக்கு என்ன செல்வாக்கு? என்பதை நாட்டில் நடந்த கிளர்ச்சிகளும், இதர தலைவர்கள் விட்ட அறிக்கைகளும் நிரூபித்து விட்டன,

அப்பொழுதே நாம் கூறினோம் ஒரு முடிவும் ஏற்படாதென்று. அவ்வமயம், காயிதே ஆஜம் அவர்களுக்குக் கணக்கற்ற தந்திகள் வந்து குவிந்தன. அவற்றுள் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், காயிதே ஆஜம் அவர்களுக்குக் கொடுத்த தந்தியில் ,,ஏமாந்துவிடாதீர்கள்; எல்லாப் பாசாங்குகளும் செய்வார்கள் ,, என்று பச்சையாக எடுத்துக் கூறியிருந்தார், அதுதான் இன்று ஜனாப் ஜின்னாவுக்கு அதிகப்பயன் பெற்றிருக்கும் என்பது எமது எண்ணம்,

ஜனாப்ஜின்னா அவர்கள், பெரியார் ஈ. வெ ரா. திராவிடஸ்தான் சம்பந்தமாகத்தமக்கு எழுதிய கடிதத்தையும், அவர் பதிலையும் பத்திரிகையில் வெளியிட்டார். இதுமுஸ்லிம்களின் பிரதிநிதி என்பதின் காரணத்தினாலேயாகும். திராவிடஸ்தான் சம்பந்தமாக ஜனாப் ஜின்னா அவர்கள் விவாதித்திடில் நீர் யார்? இந்துக்களுக்குள் பிளவேற்படுத்தவா முயற்சிக்கிறீர்? என்று திரு காந்தியார் கேட்கக்கூடும். பிறகு சங்கடமான நிலையும் வரலாம். எனவேதான் தமது அபிப்பிராயத்தைப் பொது மக்களுக்க அறிவித்தார். இதைப் பத்திரிகைகள் திரித்துக் கூறின. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் ராஜ தந்திர முறையிலே தமது நிலையை, தமது அந்தஸ்தைக் காப்பாற்றக் "குடி அரசில்" வெளியிட்டார். அவர் அபிப்பிராயம் அத்தனையும் இன்று நிகழ்கிறது. ஜனாப் ஜின்னா மீது தமக்குப் பூரண நம்பிக்கை கொண்டென்றும், திராவிடஸ்தான் இருந்தால்தான் தென்னாட்டு முஸ்லிம்கள் சுபிட்சமுடன்வாழ முடியுமென்றும். ஆகவே அம்முஸ்லிம்களின் ஆதரவு தமக்கு வேண்டுமெனவும் விட்ட அறிக்கையே அது. அரசியல் ஞானம், சந்தர்ப்பம் அறியாத சிலர் "குடி அரசு" மீது கோபித்துக்கொண்டனர். முஸ்லிமகளின் விரோதிகள் எப்படியாவது முஸ்லிம்களை பெரியார் கட்சி (திராவிடர் கழகம்)யிலிருந்து நீக்கிவிடவேண்டுமெனமுயற்சித்தனர் அம்முயற்சி சிறிதும் நடைபெறாதென்பதை ' திராவிடநாடு " எச்சரித்திருக்கிறது.

உடனடியாக, இந்துமகாசபையுடன் உறவுகொள்ளப் பெரியார் நினைத்திருக்கிறார் என்று பிரச்சாரம் வலுத்தது திரு வேதாச்சலம் அவர்கள் இல்லத்தில் சந்தித்தனர், பேச்சு நடந்தது.. இந்துமகாசபைக் கொள்கைக்கு முற்ற முற்ற விரோதமானதை வற்புறுத்தினார் பெரியார். மூஞ்சே போன்றவர்கள் கல்லில் நார் உரித்தமாதிரியிருக்கிறதெனக் கலைந்தனர். இது சம்பந்தமாகப் பல வதந்திகள் திரித்துக் கூறப்படுகின்றன.

எனவே, பெரியார் அவர்கள் மற்றுமொரு முறை தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு முஸ்லிம்களுக்கு விளங்கச் செய்யுமாறு விழைகின்றோம்.

---

# திராவிடர் கழகம் அமைப்புக் கூட்டம்.

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை அநுசரித்து மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் திராவிடக்கழகங்களை அபிவிர்த்தி செய்யவும், அமைக்கவும் நாளது அக்டோபர் மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு மதுரையில் எனது இல்லத்தில் ஒரு ஆரம்பக்கூட்டம் நடைபெறும், திராவிடக்கழகத்தில் ஆர்வமுள்ளவர்கள் எல்லோரும் இதையே அழைப்பாக ஒப்புக்கொண் வந்து சேரக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

W.P.A சௌந்திரபாண்டியன்,
மதுரை.

---

# பேடிப்பயலே நிதானமாக நடந்துகொள் !

( இரணியன் )

வர வர உனது குரைப்பு சிறிது அத்து மீறுகிறது. திரு பாகவதரைப்பற்றி எழுதினாய், தோழர் N S.கிருஷ்ணனைப்பற்றி எழுதினாய், சினிமா நடிகர், நடிகைகளைப்பற்றி எழுதினாய், பதினைந்து இலச்சம் மருத்துவர்களுக்கு வழிகாட்டியாக உள்ள திரு பண்டித, என், எஸ். ஆனந்தம் அவர்களைப்பற்றி எழுதினாய், பதினைந்து இலச்சம் மக்களை இழிவாக எழுதிருந்தாய். ஏ! மானங்கெட்ட காந்தனே! உன்மாதிரி பேடிகளல்ல மருத்துவர்கள், குண்டும், மருந்தும் கத்தியும் வைத்திருப்பதாகப் பயமுறுத்தும் பஞ்சைகள் அல்ல மருத்துவர்கள், இளித்தவாயரை ஏய்த்துப் பிழைக்கும் ஏமாளிகளல்ல, மானத்தில் மரியாதையில் அக்கரையுடையவர்கள் மருத்துவர்கள். உன் மாதிரி மோசடிக்காரர்கள் என்றால், உன் உயிரை எங்கள் கையில் கொடுத்துவிட்டு நீ நாற்காலியில் படுத்திருக்கும்போது, உனது கழுத்திலே கத்தி விளையாடும்போது, உன் கண்மீது கத்தி ஊர்ந்து செல்லும்போது, உன் மூக்கின் மேல் கத்தி முத்தமிடும்போது உன்மாதிரி இழிகுணம் எனது சமூகத்தினருக்கு இருந்திருந்தால்? உன்மாதிரி நாங்கள் நினைத்தால், உனது மூக்கையோ, முகவாய்க் கட்டையோ, கண்ணையோ "அம்பட்டன்" என்று எழுதிய பிறகும் வைத்துக்கொண்டிருக்க முடியுமா? என்பதை யோசித்துப் பார் "அம்பட்டன்" என்று எழுதிய அயோக்கிய லக்ஷிமிகாந்தனே நிதானமாக நடந்துகொள்! எச்சரிக்கை!!

---

# ஒளிந்து திரியும் ஊதாரியே கேள்!

## லக்ஷிமிகாந்தனுக்கு சவால் !

( மதுரை மாநாட்டார் )

மதுரையில் 24-9-44 தேதியன்று திருக்குரான் மகாநாடு கூடியது. மகாநாட்டின் தலைவர், திறப்பாளர்களின் அழகிய ஆங்கிலம் பிரசங்கங்களை, அதேஉணர்ச்சியுடன் தமிழில் மொழிபெயர்த்து "சமரசம்" ஆசிரியர் ஜனாப் S M சுல்தான் பக்தாதி அவர்கள் சொல்லியிராவிட்டால், அந்த மகாநாடே சோபித்திருக்காதென்று அங்கு குழுமியிருந்த மக்கள் யாவரும் கூறினர். கொக்கோகநேசன் ஆசிரியன் போன்ற படுக்கை அறை பரிசோதிக்கும் பகல் வேஷக்காரன்களுக்குத் தெரியுமா?

சினிமாவிற்குக்கோஷாப்பெண்கள் போவது கூடாதென தீர்மானம் வந்ததில், அத்துடன் கூண்டு கொடியேற்றம் முதலியவைகளுக்கும் போகக்கூடாதென ஜனாப பக்தாதி அவர்கள் கொண்டுவந்த திருத்தம், எவ்வித ஆட்சேபணையுமின்றி மாநாடு ஏற்றுசதீர்மானித்ததை ஏமாற்றி வாழும் லட்சைகெட்டவன்களுக்கு எப்படி தெரியும்?

"சமரசம்" ஆசிரியர் ஜனாப் பக்தாதி, மதுரையில் சுமார் 25 வருடகாலம் எல்லாமக்களுக்கும் சேவைசெய்து, மதுரை தீர்மானத்திற்கொப்ப திருச்சியிலேசிறும் சிறப்புடன் பத்திரிகை நடத்தி அரிய பணி செய்து வருவதை மதுரை வாசிகளாகிய நாங்கள் அறிவோம். எங்கள் தலைவர்கள் அறிவார்கள். மேலும், ஜனாப் பக்தாதி அவர்கள் வருகின்ற கூட்டங்களுக்கு ஆயிரக் கணக்கான மக்கள்கள் அவரின் அரிய பிரசங்கங்களைக்கேட்டு மகிழவருவதைக் கண்டால் வயிறெரிந்து சாவான் போலிருக்கிறது இந்த வஞ்சக நெஞ்சன லக்ஷிமிகாந்தன்!

மதுரையில் ஏதோ ஜனங்கள் அவரிடம் சரமாரியாகக் கேள்வி கேட்டதாகவும், அதை அவர் மழுப்பித் தப்பித்து ஓடிப்போய் விட்டதாகவும் தறுதலைப் பத்திரிகையாகிய கொக்கோகநேசன் கூறுகிறது. ஜனாப் பக்தாதி அவர்கள் உன்மாதிரி பேடித்தனமாக ஒளிந்து, மறைந்து, ஊதாரித்தனமாக கொக்கோகம் பாடும் குடிகாரல்ல. மதுரையில் காங்கிரஸ் கிலாபத்தில் உழைத்த பொது ஜன சேவையில் பெரும் தியாகியெனப் பெயர்வாங்கி, திரு காந்தியார் முதல் எல்லாத்தலைவர்களாலும் போற்றப்பட்ட உத்தமர். அவர் எடுத்தகாரியம் அத்தனையிலும் வெற்றி கண்டவர்: "கொட்டினால் தேள் ; பேனு

(3-ம் பக்கம் பார்க்க)

# பாகவதரைக் குறை கூறும் பண்பற்ற முண்டமே!

## ‘இந்து நேசனுக்கு’ இழவு ஓலை !

[உண்மை உரைப்போன்]

புராணங்களிலேஎத்தனையோ சகிக்க முடியா ஆபாச, அக்ரம ஊழலை வைத்துக் கொண்டு, அதைத் திருத்த ஒன்றும் வழி தெரியாது, விபசாரத்தைப் போக்குவேன் என்பது கள்ளுக் கடையைவைத்துக்கொண்டு மது விலக்குப் பிரச்சாரம் செய்வது போலிருக்கிறது லட்சைகெட்டவனின் செயல் ! வெட்கம் !!

அவையெல்லாம் இவன் கண்ணுக்கு எப்படிப்படும் ? மோசடி பொய்க் கையெழுத்திட்டு பாங்கியில் கொள்ளையடிக்கும் பண்பு நிறைந்திருக்கலாம். பணக்காரர்களை மிரட்டிப் பணம் சேர்க்கும் வேலையிலே பயிற்சி பெற்றிருக்கலாம். திருடிச் சிறையிலே சிக்கி, அதிலிருந்து தப்பிவர வழி கண்டு பிடித்திருக்கலாம். சினிமா நடிகைகளைக் கண்டு காமுற்று, கைபிடித்திழுத்து அவர்கள் மறுக்கவே, அவர்களைத் திட்டச் செங்காங்கடைத் தெரு தட்டர்களின் பள்ளியிலே சொற்கள் பயின்றிருக்கலாம். ஆனால் சு. ம க்களின் ஒப்பற்றக் கருத்துக்களை உள்ளபடி உணர மாட்டான் பத்திரிகையிற்ப் பலகைத் திட்டுவது தான் என்று கண்ட காலிப்பயல் !

நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணனை சோடா வண்டிக்காரன் எனகிறான் அறிவிலா முண்டம், அதனால் அவர்களை இழிவு சேருமென்று தவறுபட எண்ணி! சோடாவண்டி இழுத்தானென்று சோரம் பேசுமா ? அல்லது சோடா வண்டி இழுத்த ஒருவன் இன்று சோபாவிலே சாய்ந்து கிடக்கும் சீமான்களுக்கும் பேட்டிக் கொடுக்கும் வெம்மானாய் உயர்ந்துள்ளான் எனப் புகழுமா? நகைச்சுவை என்பது நவச் சுவையிலொன்று, நாநிலம் புகழும் சுவை அது, ஆனால் நாலைந்துபேர்கள் கூட அதைப் பெறுதலரிது. பெற்றாலும் அதைப் பகுத்தறிவு வளர்த்திடப் பயன்பெறல் என்பது அரிதினும் அரிது என்பதை அறிவாயா ? இதற்கெல்லாம் உனக்கு நேரமேது? பள்ளியறைகளிலே பளிச்சென வெளிச்சம் பிடிக்கும் பணி பெரிதன்றே ! இல்லாவிட்டால் U. R. ஜீவரத்தினம், எம். எஸ். சுப்புலக்ஷ்மி, வசந்தா, இவர்கள்பலரது படுக்கையறைகளிலே அலங்கரிக்கிறார்கள் என்பதை நீ எப்படி அறிய முடியும் ?

பாகவதரைக் குறை கூறும் பண்பற்ற முண்டமே ! அவரது குரலினிமை தெரியுமா ? விபச்சாரத்தை வெருட்டும் வீரசிகாமணி! சினிமாத்துறையில் தவிர, வேறு எங்கும் விபசாரம் இடையாதா ? நாள், இடம், மணி எல்லாம் தெளிவாய்க் குறிப்பிடுகிறாய் மக்கள் ஏமாறுவார்களென்று. நான் கூறுகிறேன் “11-7-44 தேதி அன்று மாலை 7-மணிக்கு அனந்தய்யர் அவசரமாய் மாம்பலம் சென்றிருந்ததையும் அறிந்து, அவர் வீட்டிற்குச் சென்றாய். அப்பொழுது அவர் மனைவி, அய்யர் இல்லாததை அறிவித்தாள். ஆனால், நீ உள்ளே சென்றாய். ஓர் அறையில் [மேற்குப்புறம் வாசற்படியுள்ள முதல் அறை] அவளை இழுத்துச்சென்று விளக்கை அணைத்துவிட்டாய். பின் இரவு 3 மணிக்கு வெளியில் வந்தாய். காலை வரையில் அவள் வெளியில் வராதிருந்ததைக் கண்டு வேலைக்காரி போய்ப் பார்த்ததில் ஆடை விலகி அலங்கோலமாய்க் கிடந்தாள்!” இதை விளம்பரம்செய்தால் மக்கள் நம்புவார்களா ? அறிவிலி ! அதை நாங்களுமறிவோம். ஆனால் மனச்சாட்சி தடுக்கிறது. உனக்கு அது இல்லை. அதனால் எழுதுகிறாய் என்பது வெளிப்படை ! எல்லாம் விபசாரம் என்கிறாயே நீ சொந்த அப்பனுக்குப் பிறந்தாயென்பதை எப்படி நம்புவது ?

சு. ம. என்பதற்கு விளக்கம் எழுதியிருக்கின்றாய் வெகு பொருத்தமாய் ! ஆம் ! புத்தலகைச் சித்தரிப்பார் தான் தன்மானக் கூட்டத்தார், சமுதாயத்தைத்திருத்தியமைக்கும் தீரர்கள் தான் அந்தப் பகுத்தறிவாளரின் பாசறை. ஆரியத்தின் ஆக்ரமிப்பிலிருந்து திராவிடத்தைப் பிரித்து, திராவிடரினத்தைப்புதுமையாகச் சித்தரிக்கப் போகும் அந்த வீரரின் அணிவகுப்பை உண்டாக்கும் உண்மைத் தலைவர்கள்தான் பண்டைப்பெருமையை இன்று அமைத்திட முயலும், வெற்றிச் சங்கு முழங்கும் வீரர்கள் தான் ! ஏனெனில் மடையர் என்றால் சமைப்பவர், உண்டாக்குபவர் என்று பொருளுண்டு, அதை நீ அறியமாட்டாய் கர்த்தபமே !

தலைவர்களின் தன்மைகளை வெளியிடப் போகிறாயா? நன்று! இந்தி எதிர்ப்பிலே ஆனந்த விகடன் காரியாலயத்தின் அவதி நினைத்து நடுங்கும் உனக்கும் எழவோலை எழுதப் பேனாவை வைத்துக் காத்திருப்பதையும் அறிவிக்கிறேன்.

——

# ஏஜண்டுகளுக்கு

ஒரு ஊருக்கு ஒருஏஜண்டைத் தான் நியமிப்போம். ஒரே ஊருக்குப்பல ஏஜண்டுகள் கேட்கப்படுவதால், எவர் முந்திக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்கே (சென்னை நீங்கலாக) ஏஜன்ஸி கொடுத்துவிடுவோம்.

மானேஜர்,

——

## காந்தியாருக்கு பெர்னுட்ஷா பதில்.

காந்தி பிறந்த தின விழாவை ஒட்டி பெர்னுட்ஷா, “நான் எவருக்கும் ஜெனன தின வாழ்த்து அனுப்புவதில்லை. எனக்கு எவரும் அனுப்பவேண்டுமென நான் விரும்பவுமில்லை” என்று கூறியிருக்கிறார்.

——

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முனையில் மாத்திரமல்ல., வேறு எந்த விதத்திலும் தீங்கு செய்வோம்” என்ற கொக்கோகநேசனின் கூக்குரலுக்கு ஜனாப் பக்தாதி அஞ்சுபவரல்ல.

திருடனாகிய உனக்கு திராணி வெளி எங்கே ? எதற்கு வருகிறாய் ? எப்பொழுது ? தனியாகவா ? உன் ரத, கஜ, துரக, பதாதிகளுடனா ? எந்த இடத்திற்கு ? பேனா முனையிலா ? பேச்சு வன்மையிலா ? அல்லது வேறுவிதத்திலா ? ஆண்மையுண்டா ? என்பதைத் தெரிவிப்பாயா ?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டினும், ஹால்சினும், பொலோனியிலும், கலேயிலும் அவர் அடைத்துப்போட்டுவிட்டார். இத்தாலி, யுகோஸ்லாவியா, ருமேனியா, பால்டிக் மாகாணங்கள் ஆகிய இடங்களில் விட்டு வைத்த பெரும்படைகள் பலத்த கஷ்டத்துக்கு உள்ளாகி விட்டன, ஜெர்மனி அழிந்தாலும் சரி. சரணடைவதில்லை. என்ற உறுதிதான் இந்த ராணுவ வெறிக்குக் காரணமாகும்.

ஆகவே, ஜெர்மனியை வேரறுக்கவேண்டி வந்தாலும் சரியென்று ஜெர்மன் எதிர்ப்பை ஒரேயடியாய்க் குலைத்தொழிப்பதைத் தவிர பிரதம நேச தளபதிக்கு வேறு வழியில்லை. ஜெனரல் ஐஸன்ஹோவர் ஜெர்மனியிலுள்ள 1, 20, 00, 000, அந்நியத் தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி தந்து கொடுங்கோலர்களை எதிர்த்துக் கிளர்ப்புப்படி அவர்களுக்குக் கூறியிருக்கிறார். இதனால் உள்நாட்டு முனையிலும் ஜெர்மனிக்குத் தொல்லைகள் அதிகமாகிவிடும். ஜெர்மனியைச் சிப்பிடியினின்று விடுவிப்பதில் ஜெர்மன் மக்களிலேயே எத்தனை ஒரு பகுதியார் பங்கெடுத்துக் கொள்வார்களா என்பது இன்னும் தெரியவில்லை.

——

## கான்பகதூர் P. ஷர்புதீன்

——

திருச்சி பப்ளிக் பிராஸிகூட்டர் கான்பகதூர் பி. ஷர்புதீன் எம். ஏ., பி. எல்., அவர்கள் வடமலையாளம் ஜில்லாவுக்கு ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜாக சர்க்காரால் நியமிக்கப்பட்டு 5-10-44 இரவு மலபாருக்கு பிரயாணமானார்கள்.

அன்று அவரைப் பாராட்டி அசிகூறுமுகத்தான் ஜனாப் A. S. ஈசப்ராவுத்தர் அவர்கள் திருச்சி டவுன்ஹால் முன் ஓர் தேனீர் விருந்து நடத்தினார்கள்.

திருச்சி கலெக்டர் W. H. மிச்சல், மூல்ச்சந்த்சேட், ராவ்பகதூர் ராமசாமி ஐயர், ஜனாப் சுல்த்தான் பக்தாதி முதலியோர்கள் கான்பகதூர் அவர்களைப் பாராட்டிப்பேசினார்கள், மற்றும் ஏராளமான பிரமுகர்களும், பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

——

## சமரசம் ஏஜண்டுகள்

(தொடர்ச்சி)

O. A, ரஜாக் சாயபு,
சைக்கிள் கடை,
திருவாடி.

R. சிங்காரவேலு,
9, சாணார தெரு,
புதுச்சேரி.

E. நாராயணன் நாயர்,
பெரியகடைவீதி,
கோவை,

E. முகம்மது முஸ்தபா,
பெரியகுளம்,

P. வீரய்யா,
வேலாயுதம்பாளையம,

D. தமிழரசு,
திராவிடர் கழகம்,
கரூர்,

P. சுப்ரமண்யன்.
காரைக்கால்,

K. P, வன்னியர்,
சழித்தலை.

குகா ரெடிமேட் ஹவுஸ்
தேவகோட்டை,

M. K. சுந்தரம்,
சிதம்பரம்,

A. ஆறுமுகம்,
மைலாப்பூர். சென்னை,

A. அப்துல் சமத் சாஹிப்,
போளூர்,

R. துரை ராஜ்,
ராஜபாளையம்,

P. பொன்ராமன்,
கீழமாசி வீதி.
மதுரை.

அச்சம், தயை, தாட்சண்யமின்றி உண்மையாக நாட்டுக்குத் தொண்டு செய்யும் ஆங்கில தினசரி

“லிபரேட்டர்”

வாங்கிப் படியுங்கள் !

மானேஜர்,
“லிபரேட்டர்”
2-11 மவுண்ட் ரோடு, சென்னை.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

வாகயிருக்கும் இந்தப் பேர்வழி யைகம்பி எப்படி முன்பணம் கொடுப்பது? என்று கேட்கின்றேம். அல்லது இது 8ம்மோசடி வித்தையா?

[16-9-44] "இந்து நேசன்" 2-ம் பக்கத்தில் 3-ம் பத்தியில் துடைப்பக்கட்டை சாத்துப்படி என்ற மகுடத்தின் கீழ் சந்திரா டாக்கீஸ் ஆட்கள் சினிமாவழியில் நின்றுகொண்டு போகும் பெண்களை இடிப்பது, பார்ப்பது முதலியசெய்கைகளைச் செய்கின்றனர். ஒரு பெண்ணை மோதவே அந்தப் பெண் துடைப்பக்கட்டை சாத்துப்படி வேண்டுமா என்று எச்சரித்ததாக ஓர் செய்தி காணப்படுகின்றது. "இந்து நேசனுக்கு" அகப்படும் எந்த சாக்கடைச் செய்தியானாலும், நிறம், உருவம், அளவு, கதவு எண், தெருவின் பெயர், ஆளின்பெயர் தலை எழுத்துடன் பூரா விபரங்களையும் கேட்டுப்போட்ட ஆசிரியன்மேற்கண்ட துடைப்பக்கட்டைச் செய்தியில் பெயர், விலாசம் முதலிய விபரம் காணப்படாததற்குக் காரணம் என்ன? யார் இடித்தது? பெயர் என்ன? யார் திட்டினது பெயர் என்ன? சம்பவம் நிஜமாகயிருந்தால் பூரா விபரம் கிடைத்திருக்கும். கற்பனையாக இருந்தால் விபரம் கிடைக்குமா? சினிமாவுக்குப் போகின்றவர்களைத் தடை செய்ய இதுஒரு குயுக்தியா? அல்லது 9-வது மோசடி வித்தையா?

### எரிகிற வீட்டில்

கின்ற "சினிமா தூது" வெள்ளி வெளியீடு, "இந்து நேசனே" சனி வெளியீடு. ஆனால் சிலைப் பத்திரிகையைப்போல் ஒருவாரம் தள்ளிக்கூட வரும். உள்ளூரிலேயே புதன், அல்லதுவியாழன் வெளி விற்பனைக்கு வரும். அதுவும் புதன் பிராட்வேயில்விற்பனையாகும், வியாழன் மவுண்ட்ரோட்டில் விற்பனையாகும். புதன் 25 காப்பி வெளி வந்தால், வியாழன் 100 வந்துவிடும். எல்லாக் கடைகளிலும் ஏக காலத்தில் விற்பதில்லை, எரிந்த வீட்டில் பிடுங்கினது லாபம் என்றதைப் போல் ஒருகடையில் அணு 2, வேறொரு கடையில் அணு 3. கொஞ்சம் மிஞ்சிக் கேட்டால் காப்பி யில்லை என்ற பதில். ஜாலவித்தை என்றால் பொது மக்களுக்குப் பார்க்க ஆசைப்படுவதுஇயற்கை. பொது மக்கள் ஒரு காப்பியை அணு 8 கொடுத்தும் வாங்கிப் பார்க்கின்றனர். "இந்து நேசன்" அதிகக் காப்பிகள் அடித்தாலும், அல்லது ஏக காலத்தில் எல்லா இடத்திற்கும் காப்பிகளை அனுப்பினாலும் செல்வாக்கு இருக்காது என்ற எண்ணமா? அல்லது இதுவும் 10-வது மோசடி வித்தையா?

## பொது மக்களே உஷார்!

"இந்து நேசனின்" ஜாலவித்தையில் பொது மக்கள் அதிகம் ஏமாறுவதைக் கண்டு, ஏமாற்றத்தினின்றும் விழிப்படையச் செய்யவே "இந்துநேசனின்" பத்து ஜால வித்தைகளை விளக்கினேம். இக்கட்டுரையைக் கண்ட பிறகும், ஏமாறக்கூடாது என்று பொது மக்களுக்கு எச்சரிக்க ஆசைப்படுகின்றேம். தவிர "இந்து நேசனின் மோசடி வித்தையில் ஏமார்ந்து அல்லது பயந்து, வாரம்வாரம் கப்பம் அல்லது அபராதம் கட்டுகிறேம் என்பவர்களுடன் நமக்கு வாதமில்லை என்று தெரிவிக்கின்றேம்.

சர்க்கார் "இந்து நேசனின்" அசம்பாவத்தைக் கவனித்து வருகிறார்கள் என்றாலும், கட்டைமயிரையும் அசைக்க முடியாதுஎன்ற வார்த்தைக்காகவேண்டியாகிலும், அல்லது பொது ஜனங்கள் இப்பத்திரிக்கையைப் படித்துப்படித்துச் சில ஆபாச, அட்டகாச வழியில் இறங்குமுன்னும், உடனே நடவடிக்கையை எடுத்து "இந்து நேசனுக்கு" புத்தி கற்பிக்கவேண்டும் என்று சர்க்காரை வேண்டுகிறேம்.

தாஸ் பற்பொடி
ரோஸ் பற்பொடி
தங்க பஸ்பம் பற்பொடி

இவைகளை விற்பனை செய்ய வெளியூர்களில்ஏஜண்டுகள்தேவை விபரங்களுக்கு. மானேஜர்

தாஸ் பற்பொடி டிப்போ
30, ரெஜிமெண்டு பஜார்,
தென்னூர், திருச்சி.

## கான் பகதூர் பி. ஷர்புதீன் ஜில்லா ஜட்ஜ்

திருச்சி பப்ளிக் பிராஸிகூட்டர் கான் பகதூர் பி. ஷர்புதீன் எம். ஏ. பீ. எல். அவர்களை ஜில்லாஜட்ஜா », நியமிப்பதற்கு சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

## திரு சுவாமி நாதனுக்கு ஒருவருஷம்

சர்க்கார் பணத்தைக் கையாடியதாக திரு டி. எஸ். சுவாமிநாதன் ஐ. ஸி. எஸ், திரு கே. அச்சுதராமையா ஆகிய இருவர் மீதும் கொண்டு வரப்பட்ட வழக்கை விசாரித்த மேலக்கோதாவரி செஷன்ஸ் ஜட்ஜ் இன்று பிற்பகல் இரண்டு மணிககு தீர்ப்பளித்தார்.

முதல் எதிரி திரு சுவாமிநாதனுக்கு ஒருவருஷ கடுங் காவல் தண்டனையும் ரூ1144 அபராதமும், அபராதம் செலுத்தத்தவறினல் மேலும் 3 மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது,

இரண்டாவது எதிரி திரு அச்சுதராமையாவுக்கு 18 மாத கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

திரு டி எஸ் சுவாமிநாதனுககு 'ஏ' வகுப்பும் அச்சுதராமய்யாவுக்கு 'பி' வகுப்பும் அளிக்கப்பட்டது.

இத்தண்டனையை ஆட்சேபித்து ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி ஹாப்பல் அப்பீலை ஏற்றுக் கொண்டு, எதிரியை ஜாமீனில் விடுதலைசெய்ய உத்தரவிட்டார்.

## எதிர்பாருங்கள்

நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கட்டுரைகள் சமரசத்தில் வெளி வரும்.

## பிரிட்டன் மீதே குறியான ஹிட்லர்!

பஸிபிக்கில் தெற்கு பலாவ்தீவுக் கூட்டத்தில் அமெரிக்கர் இறங்கிய முதல் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜப்பானியர்கள் கொல்லப்பட்டனரென இராணுவ காரியாலய அறிக்கை யொன்று கூறுகிறது.

ஹாலந்தில் பிரிட்டிஷ் விமானத் துருப்புகளும், நேச விமானத் துருப்புகளும் நடத்திவரும் வீரப் போர் நாஸி ஜெர்மெனியின் நெருக்கடியான நிலைமையையே காட்டுகிறது. ராணுவ முறையில் ஜெர்மனி படுமோசமான நிலையில் இருப்பதாக ஜெனரல் ஐசன்ஹோவர் கூறுகிருர். இந்தவருஷம் ஜெர்மன் சைனியங்கள் தோற்று விடுமென்றும் அவைகளை ஒரேயடியாய் முறியடிப்பதற்கு முன் கடும்போர்நடத்தவேண்டியிருக்குமென்றும் பீல்ட்மார்ஷல்மாண்ட்காமேரி எதிர்பார்க்கிருர். ஹிட்லரின் விசித்திரமான யுத்த தந்திரம் ராணுவ நிபுணர்களுக்கும் பிடிபடுவதாயில்லை. ஒன்று மட்டும் தெரிகிறது.

நாலு வருஷத்துக்குமுன்னே பிரிட்டன் அழிந்தால்தான் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்குமென்று ஹிட்லர் தெரிந்துகொண்டு விட்டார். இதனால்தான்பிரிட்டிஷ் கடற்படையைச் சமாளித்து ஐரோப்பாக்கண்டத்தில் முழுபலத்தையும்பிரயோகித்து பிரிட்டனைச் சிதைத்து விடலாமென்ற நோக்கத்துடன் ரஷ்யாவைத் தாக்கினர். ரஷ்யாவில் ஏற்பட்ட தோல்வி பிரிட்டனை எப்படியாவது அழித்தாகவேண்டும் என்ற எண்ணத்தையும் பின்னும் பலப்படுத்திவிட்டது. ஆகவே, எல்லா முனைகளிலும் எதிரியைத்தாமதப்படுத்தும் நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு, பறக்கும் வெடிகுண்டுகளை பெருக்கலானர். அவருடைய நம்பிக்கையெல்லாம் இந்த ரகசிய ஆயுதத்திலேயே இருந்தது. வட பிரான்ஸில் கைப்பற்றப்பட்ட பிரமாண்டமான பாதாளத் தொழிற்சாலையும் இந்தக்கருத்தை ஆதரிக்கின்றன. நேசக்கட்சியினர் நார்மண்டியில் வெற்றிகரமாய் இறங்கிய பின்னும் இந்த நம்பிக்கையை அவர் விடவில்லை. ஜெர்மெனியில் உள்நாட்டுத் தற்காப்பைப் பலப்படுத்தி யிருக்கக் கூடிய பெரும்படைகளை பிரான்ஸ்

(3-ம் பக்கம் பார்க்க)

இந்த யுத்த காலத்திலும் தீபாவளி பக்ரீத் முதலிய பண்டிகைகளுக்கு
லாபகரமான ஜவுளிகள் வாங்க
மேன்மையான கடை!!
தி நியூ பனரஸ் ஸ்டோர்ஸ்,
ஈசூப் பில்டிங், சவுக், திருச்சினுப்பள்ளி.

பணத்திற்கு ஏற்ற பலன்! ஆடைக்கு ஏற்ற கடை!
மனம் மகிழ்விக்கும் ரகங்கள் !!!



திநியூ பனரஸ்
ஸ்டோர்ஸ்



தயவுசெய்து விலாசத்தைக் கவனித்துவாங்கவும்.

Edited & Published by MD. SULTAN BAGHDADI. Printed at the Islamiya Press, Palakarai, Trichinopoly.